# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 724/2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.18**

| | | |
|---|---|---|
| பெயர் | – | சந்திரமௌலி |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 22nd day of January 2025.**

(A2 not present. Petition filed through e-filing and allowed. A1 present.)
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)
(சாட்சி Chennai City Civil Court வளாகத்தில் உள்ள Video conference அறையில் Co–ordinator உடன் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் உள்ள ரிலையன்ஸ் ஜியோ இன்போ காம் லிமிடெட் நிறுவனத்தில் துணை பொது மேலாளர் மற்றும் தமிழ்நாடு, புதுச்சேரிக்கு நோடல் ஆபிசராக பணியாற்றி வருகிறேன். 29.8.2022 தேதியில் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து மானூர் காவல்நிலைய குற்ற எண்.272/2022 சட்டப் பிரிவு 174 Crpc (suspicious death) @ 302, 201 IPC r/w.34 IPC வழக்கு சம்பந்தமாக குறிப்பிட்ட ஜியோ கைபேசி எண் 6380774730 சம்பந்தமாக customer accusation form (CAF) மற்றும் Call Data Record (CDR) 11.7.2022 முதல் 20.7.2022 வரை வேண்டி மானூர் காவல்நிலைய ஆய்வாளர் மூலமாக

எனது அலுவலக மின்னஞ்சலுக்கும் பதிவுத் தபாலாக பெறப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட கைபேசி எண்ணிற்கான தகவல்கள் அனைத்தையும் பதிவிறக்கம் செய்து (download) அச்சிட்டு (print) முத்திரை மற்றும் கையொப்பமிட்டு 65(பி) இந்திய சாட்சிய சட்டத்தின் படி சான்றிதழ் தயார் செய்து கையொப்பமிட்டு கொரியர் தபாலில் மானூர் காவல்நிலைய ஆய்வாளருக்கு அனுப்பினேன். நான் கொடுத்த customer application, CDR, 65(B) Certificate ஆகியவற்றை கொடுத்ததற்கான covering letter அ.சா.ஆ.18 வரிசை. இது சம்பந்தமாக மானூர் காவல்நிலைய ஆய்வாளர் என்னை தொலைபேசியில் விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் வழங்கிய CDR அறிக்கை சம்பந்தப்பட்ட கைபேசி எண் செல்லதுரை, த/பெ.ராமசாமி என்பவர் பெயரில் உள்ள கைபேசி எண் என்றால் சரிதான். அந்த கைபேசி எண் 17.7.2022 காலை 09.27 மணி முதல் 18.7.2022 காலை 08.22 மணி வரை நாரணம்மாள்புரம் என்ற பகுதியில் இருந்த டவர் லொகேசனில் தான் இருந்தது என்றால் நாரணம்மாள்புரத்திலும், தாழையூத்து பகுதியிலும் இருந்தது. நாரணம்மாள்புரமும் தாழையூத்து டவரில் தான் கவரிங் ஆகும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

மறுவிசாரணை இல்லை